**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No.CC.217/2020**

| | | | |
|---|---|---|---|
| Deposition of Name | அய்யப்பன் | Prosecution | PW1 cross |
| Father Name | பஞ்சவர்ணம் | Defence | |
| Village | கொடக்காரமூளை | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 45/2025 |

Solemnly affirmed by Tmt.K. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day **19.09.2025.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**குறுக்கு விசாரணை**

**1.** இந்த வழக்கின் எதிரிகள் எனது வீட்டுக்கு எதிர்த்த வீட்டில் வசிக்கிறார்கள் என்றால் சரிதான். சம்பவம் இரவு 8.30 மணிக்கு நடந்ததால் சம்பவ இடம் இருட்டாக தான் இருந்தது என்றால் சரிதான். நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்திலும் இவ்வழக்கில் சொன்ன முதல் விசாரணை சாட்சியத்திலும் சொன்ன சங்கதிகள் அனைத்தும் உண்மைதானா என்றால் உண்மைதான். நான் போலீசாரிடம் சம்பவம் 04.05.2019ல் நடந்தது என்றும் அதற்கு முரணாக என் முதல் விசாரணையில் 04.06.2019ல் சம்பவம் நடந்ததாகவும் மாற்றி சொல்லி உள்ளேன் என்றால் சம்பவம் நடந்தது 04.06.2019ல் தான். நான் புகாரிலும் மற்றும் மருத்துவரிடமும் எதிரிகள் என்னை குச்சியால் தாக்கியதாக சொல்லிவிட்டு முதல் விசாரணையில் அவர்கள் இரும்பு கம்பியால் தாக்கியதாக மாற்றி சொல்லியுள்ளேன் என்றால் அவர்கள் என்னை இரும்பு கம்பியால் தான் அடித்தார்கள். நான் சொல்வதில் உண்மை இல்லை என்றாலும் அதனால் தான் எனது சாட்சியம் முன்னுக்குப் பின் முரணாக அமைந்துள்ளது என்றாலும் சரியல்ல.

2.சம்பவம் நடந்த இடம் விவசாய நிலம் என்பதால் அங்கு இரும்பு கம்பி கிடைக்க வாய்ப்பில்லை என்றால் திட்டமிட்டு எதிரிகள் நான் வரும் வழியில் பதுங்கி இருந்து என்னை தாக்கினார்கள். நான் என் முதல் விசாரணையில் நான் மாட்டை விரட்டியதாக என சொல்லி உள்ள நிலையில் அத்தகைய மாடு முட்டியதால் தான் எனது கையில் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அ.சா.2 கண்ணதாசன் என்பவர் தான் என்னை மருத்துவமனைக்கு இருசக்கர வாகனத்தில் வைத்து அழைத்துச் சென்றார் என்றால் சரிதான். என்னை யார் தாக்கினார்கள் என்கிற விவரம் கண்ணதாசனுக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் சொன்ன பிறகு தான் அவருக்கு அது பற்றி தெரியும்.

3. அ.சா.2 தனது சாட்சியத்தில் நான் சொல்ல அந்த விபரம் தனக்கு தெரியும் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் என் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளில் உண்மை இல்லை என்றாலும் அதனால் தான் எந்த சாட்சியமும் எனக்கு ஆதரவாக அமையவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்திற்கும் இந்த வழக்கின் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை. எதிரிகளுக்கும் எனக்கும் ஏதேனும் முன் விரோதம் உள்ளதா என்றால் கிடையாது. நான் கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் என்னிடம் படித்துக் காட்டினார்களா என்றால் படித்துக் காட்டினார்கள். அதில் நான் சொன்ன விவரங்கள் தான் எழுதப்பட்டிருந்ததா? என்றால் ஆமாம். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரி இல்லை.

**குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறுவிசாரணை இல்லை,**